Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

MONDAY, AUGUST 29, 2022

திங்கட்கிழமை ஒகஸ்ட் 29,2022 | ஒளி: 08கதிர்087 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# 'மக்கள்' அபிவிருத்தி பட்ஜெட் வருகிறது




ஏழை மக்களின் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை வழங்கி, வரித் திருத்தங்களுடன் கூடிய, மக்களை அபிவிருத்தி செய்யும் வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைப்பார் என, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பில், காலியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

வீதிகள், கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான பட்ஜெட்டாக அல்லாமல், உணவு, உடை இன்றி இருக்கும் ஏழை மக்களுக்கு உணவு உடை வழங்கக் கூடிய பட்ஜெட்டாக இது அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தொடர்ச்சி P2

# இன்று பட்ஜெட்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இடைக்கால படைஜெட், நிதியமைச்சர் என்றவகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், பாராளுமன்றத்தில் இன்று (29) காலை 9.30 மணியளவில் சமர்ப்பிக்கப்படும். தொடர்ச்சி P2




## இலங்கையை மீட்பதற்கு சீனா ஆதரவளிக்கும்

சேஹ்ன் செனவிரத்ன

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் தற்காலிக பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் என சீன தூதுவர்.சி ஷென்ஹோங் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## வெளியாகின

2021ஆம் ஆண்டு, கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று (28) மாலை. வெளியாகியுள்ளன. wdoenets.lk எனும் இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும்



### முறையற்ற பரிவர்த்தனை
## விசாரணை நடத்த விசேட குழு நியமனம்

உண்டியல் மற்றும் ஹவாலா போன்ற முறையற்ற வழிமுறைகள் மூலம் வங்கி முறைக்கு வெளியே வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளை செய்வோர், குறித்து விசாரணை நடத்த சட்டவிரோத சொத்துகள் விசாரணை பிரிவின் கீழ் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

### இலங்கைக்கு வெளியே வாழும்
# தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்



### அரசியல் தீர்வு நிச்சயம் என்கிறார் சாணக்கியன்

இலங்கையை விட்டு வெளியே வாழ்கின்ற இலட்சக் கணக்கான தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக கிடைக்கும் என்றும் அது கிடைக்கும் வரை நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது
### வதந்திகளை நம்ப வேண்டாம் என்கிறது சிபெட்கோ

டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருட்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ), எரிபொருள் தட்டுப்பாடு குறித்த தவறான வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. தொடர்ச்சி P2

## எரிபொருள் வர்த்தகத்துக்கு 24 நிறுவனங்கள் விருப்பம்



இலங்கையில் எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் 10 நாடுகளைச் சேர்ந்த 24 நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன என்று வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (28) தெரிவித்தார். தொடர்ச்சி P2

## வரப்பிரசாதங்கள் இன்றேல் பட்ஜெட்டுக்கு ஆதரவில்லை
### மொட்டுக் கட்சியினர் பிடிவாதம்

எதிர்காலத்தில் நியமிக்கப்பட உள்ள இராஜாங்க அமைச்சுக்களுக்கான வரப்பிரசாதங்கள் கிடைக்கவில்லை என்றால், நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு- செலவு திட்டத்தை எதிர்ப்போம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெசில் ராஜபக்‌ஷவுக்கு ஆதரவான குழு தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## இன்று முழு நாடும் துவண்டு போயுள்ளது



ஜனாதிபதித் தேர்தலில் பாரிய ஆணையைப் பெற்று எதிர்க்கட்சியை கழுவி ஊற்றினாலும், இன்று நாட்டையே கழுவி ஊற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் என்பது புதிய புரளி என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அவ்வாறு கூறும் அரசாங்கம் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுகின்றது என்றார். தொடர்ச்சி P2

## போசாக்கு குறைபாடு: 6ஆம் இடத்தில் இலங்கை



குழந்தைகளின் போசாக்குக் குறைபாட்டின் அடிப்படையில் இலங்கை உலகளாவிய ரீதியில் 6ஆவது இடத்திலும், தெற்காசியாவில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ளும் நாடுகளில் 2ஆவது இடத்திலும் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர்கள் நிதியம் (யுனிசெப்) தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலுள்ள குழந்தைகள் பசியுடன் நித்திரைக்கு செல்வதாக யுனிசெப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லாரியா அட்ஜெய் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## காகிதச் செலவை கட்டுப்படுத்த திட்டம்

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, ஆண்டு தோறும் கணிசமான காகிதங்களை சேமிக்க தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பதற்கு அரச அதிகாரிகள் பயன்படுத்தும் ஏ4 அளவை விட பெரிய 4 பக்க விண்ணப்ப படிவத்தை ஏ4 தாளில் 2 பக்கங்களாக குறைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. தொடர்ச்சி P2



## மின்வெட்டு திருத்தம்; இன்று கலந்துரையாடல்

நாளாந்த மின்வெட்டு தொடர்பில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அது தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை (29) இடம்பெறவுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் திடீரென செயலிழந்த முதலாம் மின் பிறப்பாக்கி வெள்ளிக்கிழமை இரவு முதல் இயங்கத் தொடங்கியதை அடுத்து, தேசிய மின் கட்டமைப்புக்கு 300 மெகாவோட் மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது. தொடர்ச்சி P2



# பொலிஸ் காவலில் சந்தேகநபர் பலி
### பொலிஸார் இருவர் பணியிடை நீக்கம்

கிரிந்திவெல பிரதேசத்தில் பெண்ணொருவரின் தங்க நகையை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் காவலில் உயிரிழந்ததை அடுத்து, இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி மாலை, பெண்ணொருவரின் தங்க நகை கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், 27 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையில், பெண்களின் தங்க நகைகளை கொள்ளையடிக்கும் பல சம்பவங்களில் அவர் ஈடுபட்டுள்ளமை தெரியவந்ததாகவும் தொடர்ச்சி P2

# பந்துல, பிரசன்ன, விமலுக்கு ஆணைக்குழு அழைப்பு







அமைச்சர்களான பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று (29) ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது, எம்.பிக்களின் வீடுகள் எரிக்கப்பட்டதுடன், சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

குறித்த எம்.பிக்கள் தமது வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமைக்கு அமையவே தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘மக்கள்’ அபிவிருத்தி பட்ஜெட் வருகிறது

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் தலைமுறை பிறப்பதாகவும் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, வரித் திருத்தங்களோடு கூடிய மக்களை அபிவிருத்தி செய்யும் வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைப்பார் என்றும் தெரிவித்தார்.
இதனால் அவதிப்படும் குழந்தைகளின் பசி போக்கப்படும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.
எவருக்கும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆவதற்கான கனவுகள் இருக்கலாம் என்று தெரிவித்த அவர், 2 மில்லியன் மக்களை வாழ வைக்கும் திட்டமும் அவர்களிடம் இருக்க வேண்டும் என்றார்.

# இன்று பட்ஜெட்

அதன் மீதான விவாரதங்கள் செப்டெம்பர் 2 ஆம் திகதி வரையிலும் நடைபெற்று அன்றையதினம் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

# விசாரணை நடத்த விசேட குழு நியமனம்

மத்திய வங்கி ஆளுநரின் வேண்டுகோளுக்கு அமைய பொலிஸ் மா அதிபரினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்தமைக்கு அந்நிய செலாவணி பற்றாக்குறையே பிரதான காரணம் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.
எனவே, நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் ஒன்று வங்கி முறைக்கு வெளியே இடம்பெறும் பணப் பரிமாற்றம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கான முறையற்ற வழிமுறைகள் மூலம் வங்கி முறைக்கு வெளியே வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளை செய்யும் புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த நெருக்கடியை எதிர்மறையாக பாதித்துள்ளனர்.
அதற்கமைய எதிர்காலத்தில் முறையற்ற வழிகளில் வெளிநாட்டுப் பணம் பெறவோ, அனுப்பவோ வேண்டாம் என பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

கனடாவில் இடம்பெற்ற தமிழ் தெரு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட அழைப்பை அவர் விடுத்துள்ளார்.
அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “இந்த உலகத்திலேயே நாடு இல்லாத இனம் என்று சொன்னால் அது எங்களுடைய தமிழ் இனம்தான். அது எங்களுடைய ஒரு துரதிஷ்ட வசம்” என்றார்.
“உலகம் எல்லாம் அனைத்து நாடுகளிலும் நாங்கள் வாழுகின்றோம். அனைத்து நாடுகளிலும் எங்களுடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருகின்றது. அனைத்து மாகாணங்கள், மாநிலங்களிலும் எங்களுடைய பிரதிநிதிகள் இருகின்றனர். ஆனால் இன்று வரை எங்களுக்கென்று ஒரு நாடு இல்லாமல் நாங்கள் இருகின்றோம்” என்று குறிப்பிட்டார்.
கடந்த காலத்தில் யுத்தத்தினால் விரட்டியடிக்கப்பட்ட எங்களுடைய மக்கள், எங்களுடைய நாட்டில் இருந்து அகதிகளாக அனுப்பப்பட்ட மக்கள் இன்று உலகம் எல்லாம் அனைத்து நாடுகளிலும் சிறந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.
இலங்கை அரசாங்கம் தமிழர்களின் முதலீடுகளையே இன்று நம்பியிருக்கின்றது என சொன்னால் அது எங்கள் அனைவருக்கும் பெருமையான ஒரு விடயம் என்றார்.
எங்களுடைய நாட்டை விட்டு, எங்களுடைய பிரதேசங்களை விட்டு எங்களை விரட்டியடித்த கோட்டாபய ராஜபக்ஷ, அதே நாட்டினை விட்டு அகதியாக இன்னுமொரு நாட்டில் தஞ்சமடைந்துள்ளார். அவருக்கு வாக்களித்த அதே மக்கள் நாட்டை விட்டு அவரை விரட்டியடித்திருக்கின்றார்கள். அதுதான் விதி என்று சுட்டிக்காட்டினார்.
“நாங்கள் எங்களுடைய நாட்டிலே ஒரு கௌரவமான அரசியல் தீர்வினை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அந்த கௌரவமான அரசியல் தீர்வின் ஊடாக எங்களுடைய நாட்டிலே வாழுகின்ற தமிழ் மக்களுக்கான நிரந்தரமான, சமாதானமான, ஒரு அமைதியான ஒரு சிறந்த எதிர்காலத்தினை அமைக்கும் வரை எங்களுடைய அரசியல் பயணம் தொடரும் என்பதனை இந்த இடத்திலே பகிரங்கமாக சொல்லி வைக்க விரும்புகின்றேன்” என்றார்.
இலங்கையில் எங்களுடைய அரசியல் தீர்வினை பெறுவதற்கு கடந்த காலங்களில் எவ்வாறு ஒன்றாக செயற்பட்டு சாதித்தோமோ அதேபோன்று மீண்டும் ஒன்றுபட்டு சாதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் உங்களை நம்பியிருக்கின்றனர் என்று குறிப்பிட்ட அவர், “உங்களுடைய ஆதரவைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். உங்களுடைய ஆதரவின் ஊடாகத்தான் நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும். அதுவரைக்கும் நாங்கள் அனைவரும் ஒன்றாக போராடுவோம்” என்றார்.

# இலங்கையை மீட்பதற்கு சீனா ஆதரவளிக்கும்

கண்டிக்கு நேற்றுமுன்தினம் (27) விஜயம் செய்திருந்த அவர், மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்னர், ஊடகங்கங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி ஒரே இரவில் முடிவுக்கு வராது என்றாலும், குறுகிய காலத்துக்குள் அதிலிருந்து இலங்கை மீள முடியுமென சீன அரசாங்கம் நம்புகிறது. சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உதவி மானியத்திற்கு மேலதிகமாக, சீன பௌத்த சங்கம் இந்த நாட்டில் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்கான உதவிகளை வழங்கும் திட்டத்தை திட்டமிட்டுள்ளது.
அண்மைக் காலமாக இலங்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கை - சீன நட்புறவில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பேணுவதே சீன அரசாங்கத்தின் நோக்கமாகும். இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெளியேறும் திறன் இலங்கைக்கு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். சீன அரசாங்கமும் அதற்கு ஆதரவளிக்கும் என்றும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

# போசாக்கு குறைபாடு: 6ஆம் இடத்தில் இலங்கை

இலங்கையில் மூன்றில் ஒரு குழந்தைக்கு ஏதேனுமொரு வகையில் அவசர உதவி தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்த நிலை தொடருமானால், இலங்கையில் குழந்தைகள் தொடர்பான முன்னேற்றம் தலைகீழாக மாறும் எனவும் சிலவேளைகளில் அது நிரந்தரமாக இழக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.
இலங்கையின் தற்போதைய நிலை தெற்காசியாவின் ஏனைய நாடுகளுக்கும் எச்சரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ளும் குழந்தைகளுக்கு உணவளிக்க 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை யுனிசெப் கோரியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

# வரப்பிரசாதங்கள் இன்றேல் பட்ஜெட்டுக்கு ஆதரவில்லை

பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடமே இருக்கிறது. இராஜாங்க அமைச்சர்களுக்கான பிரத்தியேகச் செயலாளர், ஊடக செயலாளர், ஒருங்கிணைப்புச் செயலாளர் பதவிகளும், அவர்களுக்கான வாகனங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் பெசில் குழு தெரிவித்துள்ளது.
இராஜாங்க அமைச்சர்களுக்கான அலுவலகம், ஐந்து ஊழியர்கள், மூன்று வாகனங்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கான வரப்பிரசாதங்கள், அமைச்சர்களுக்கு இணையான சம்பளங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்று முழு நாடும் துவண்டு போயுள்ளது



ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பஹுவ தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தற்போதைய தேவை பதவிகளை பகிர்ந்து கொள்வதல்ல என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், ஒருபோதும் திருடர்களுடன் சேர்ந்து அமைச்சர் பதவிகளை ஏற்க மாட்டோம் என்றார்.
ஆனால், நாட்டுக்கு நல்ல விடயங்களை அரசாங்கம் செய்யும் போது அதற்கு ஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.
தேங்காய் எண்ணெய், சீனி, பூண்டு மோசடிகள் மட்டுமன்றி கழிவுப்பொருள் கப்பலுக்கு பணம் கொடுத்த மோசடிகளையும் உடனடியாக அம்பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அதற்காக அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார்.

# போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
எதிர்கால பெற்றோலிய விநியோகத்துக்கான கொள்வனவு தற்போது நடைபெற்று வருவதாகவும் உள்ளூர் சந்தையில் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.
சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதுடன், உள்ளூர் சந்தைக்கு தேவையான அனைத்து எரிபொருட்களையும் உற்பத்தி செய்யும் திறனை நிலையம் கொண்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை உற்பத்தி செய்வதாக கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.
இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்கள், சிலோன் பெற்றோலியம் சேமிப்பு முனையத்தின் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்தவுள்ளதாக கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.
இதேவேளை, அடுத்த 3 நாட்களில் நாடளாவிய ரீதியில் அனைத்து எரிபொருட்களினதும் மேலதிக பங்குகளை விநியோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் 2 நாட்களில் எரிபொருள் வரிசைகள் குறைக்கப்படும் என்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சனிக்கிழமை (27) தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காகிதச் செலவை கட்டுப்படுத்த திட்டம்

அரச சேவையில் அமுல்படுத்தப்படும் சிக்கனக் கொள்கையின் அடிப்படையில் விடயதான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் ஆலோசனைக்கு அமைய இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்தார்.
குறித்த விண்ணப்பப் படிவத்துக்கான காகித செலவில் சுமார் 50 சதவீதம் சேமிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.
ஆண்டுதோறும் வெளிநாடு செல்ல விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக இருப்பதால், புதிய காகிதம் மற்றும் பணத்தை அரசாங்கத்தால் சேமிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.
ஏற்கெனவே இருந்த விணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் புதிய படிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பங்களை அச்சடிப்பதற்கு அரச அச்சகத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்வெட்டு...



அதற்கமையவே மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ள நிலையில், நேற்றையதினமும் 3 மணித்தியாலங்களாக அறிவிக்கப்பட்டிருந்த மின்வெட்டு 1 மணித்தியாலமாக குறைக்கப்பட்டிருந்தது.
நுரைச்சோலையில் தற்போது செயலிழந்துள்ள இரண்டாவது மின் பிறப்பாக்கி எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் எனவும் மின்சாரசபை தெரிவித்தது.
இந்த மின் பிறப்பாக்கி செயலிழந்ததால் தேசிய கட்டமைப்புக்கு 270 மெகாவோட் மின்சார இழப்பு ஏற்பட்டுள்ளது.

# எரிபொருள் வர்த்தகத்துக்கு 24 நிறுவனங்கள் விருப்பம்



நீண்ட கால ஒப்பந்தங்களில் கீழான இறக்குமதி மற்றும் விநியோகத்துக்கு பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிறுவப்பட்ட புகழ்பெற்ற நிறுவனங்களிடம் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு அமைச்சு அண்மையில் அழைப்பு விடுத்திருந்தது.
அதற்கமைய, 24 நிறுவனங்கள் இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.
இந்தியா, சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், மலேசியா, நோர்வே மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களே முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.
குறித்த முன்மொழிவுகளை அமைச்சு மதிப்பீடு செய்து ஆறு வாரங்களில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் காவலில்...

சந்தேக நபர் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன், இச்சந்தேக நபருடன் தங்கச் சங்கிலி கொள்ளையில் ஈடுபட்ட மற்றுமொரு சந்தேக நபர் வதுருகம பிரதேசத்தில் இருப்பதால், அவரை அடையாளம் காட்டுவதற்காக கிரிந்திவெல பொலிஸ் அதிகாரிகள் இருவர் சந்தேக நபரை கைவிலங்கிட்டு மோட்டார் சைக்கிளில் குறித்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.
அதன்போது, பண்டாரநாயக்கபுர பகுதியில் வைத்து, பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்தை நெரித்து சந்தேக நபர் தப்பிச் செல்ல முயற்சித்த போது, பொலிஸ் அதிகாரியின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கால்வாயில் கவிழ்ந்தது விபத்துக்குள்ளாகியுள்ளது.
சம்பவத்தை அடுத்து சந்தேகநபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
இவ்விபத்தில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

> **“ இவ்விபத்தில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது**

# பந்துல, பிரசன்ன, விமலுக்கு ஆணைக்குழு அழைப்பு

அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விசாரணைக்கு தேவையான அடிப்படை உண்மைகளை, மேற்குறிப்பிட்ட மூவரிடமும் இன்று பதிவு செய்யவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதற்கு மேலதிகமாக, மே 9 மற்றும் அதற்குப் பின்னரான வன்முறைச் சம்பவங்களின் போது வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்ட பல உள்ளூராட்சி மன்ற தலைவர்களும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.





## செயற்குழு உறுப்பினராக நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பான ஐக்கிய இளைஞர் சக்தியின் செயற்குழு உறுப்பினராக அனுஷன் கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக்கடிதத்தினை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது, அருகில், ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் தேசிய அமைப்பாளர் சமித் விஜேசுந்தர நிற்கிறார்.

கொழும்பு, பம்பல ப்பிட்டி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான அனுஷன் கணேசலிங்கம், கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்ற சங்கத்தின் உறுப்பினரும், கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

கொழும்பில் வசிக்ககூடிய சிறிய மற்றும் நடுத்தர வருமானங்களை பெறும் குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகின்றார். அவர் சிறந்த சமூக பணியாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு

# மூவரடங்கிய குழு நியமனம்



புலம்பெயர் தமிழர்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் நீதியரசர் அஷோக டி சில்வா தலைமையில் மூவரடங்கிய குழு ஒன்றை நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ நியமித்துள்ளார்.

முதன்முறையாக இணையவழியூடாக புலம்பெயர் அமைப்புகளின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட நான்கு நாடுகளின் பிரதிநிகளைக் கொண்ட கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் புலம்பெயர் அமைப்பின் உறுப்பினர்களுடன் கடந்த வாரம் அரசாங்கம் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது.

இக்கலந்துரையாடலை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு முதலில் விரைவாக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் வடக்குக், கிழக்கில் உள்ள சிவில் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோகங்களை நிறுத்த வேண்டும் என புலம்பெயர் சமூகம் இரு நிபந்தனைகளையும் விடுத்துள்ளது.

இதேவேளை இக்கலந்துரையாடலின்போது புலம்பெயர் அமைப்புக்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனமாக அவதானிக்கப்பட்டதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைமைமுறையினருக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்லாது, இவற்றைத் தீர்த்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கில் படையினரால் மேற்கொள்ளப்படும் பலவந்தமான காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் புலம்பெயர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.




## வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 700 எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

அடுத்த நான்கு மாதங்களுக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்ற நிலையில், நாட்டிலுள்ள 500 - 700 வரையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகி உள்ளது.

நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்காக சீனாவின் சினோபெக் குழுமம் உள்ளிட்ட 27 நிறுவனங்களின் முன்மொழிவுகளை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆராய்ந்து வருவதாக அதன் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவதற்கு முன்னர், இறுதி முடிவை எடுப்பதற்காக முன்மொழிவுகளை சுருக்கமாகப் பட்டியலிட திட்டமிடப்பட்டு ள்ளதாகவும், நான்கு எரிபொருள் நிறுவனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்ப ட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 1200 எரிபொருள் நிரப்பு நிலையங்களையே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

## தொகையை அதிகரிக்கும் வழிகளை நாடு ஆராய்கிறது



வெளிநாட்டு நாணயங்களை அனுப்பும் தொகையை அதிகரிப்பதற்கான அனைத்து வழிகளையும் நாடு ஆராய்ந்து வரும் வேளையில், இலங்கை இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு இது வழிவகுக்கும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள மருத்துவமனைகளில் பணியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கையின் பயிற்சி பெற்ற தாதியர் குழுவிற்கான நியமனக் கடிதங்களை, லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் வியாழக்கிழமை (25) நடைபெற்ற விழாவில் வைத்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி வழங்கிவைத்தார்.

லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன், இலங்கையின் வெலிசரவில் உள்ள சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தாதியர்களின் முதல் தொகுதி இதுவாகும்.

நியமனக் கடிதங்களைப் பெற்றவர்களை வாழ்த்திப் பேசிய அமைச்சர் சப்ரி, மிகவும் அபிவிருத்தியடைந்த சுகாதார அமைப்பில் ஒரு சிறந்த தொழிலை நோக்கிய அவர்களது பயணம் இப்போதுதான் தொடங்கியுள்ளதாகவும், அக்கறையுள்ள இலங்கை நிபுணர்கள் என்ற பிம்பத்தைக் கட்டியெழுப்புவதில் எமது நாட்டின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

‘உங்கள் வெற்றிகரமான தொழில், எதிர்காலத்தில் இலங்கைக்கான மேலதிக வாய்ப்புக்களை உறுதி செய்யும். உங்களின் நிபுணத்துவம் மற்றும் பயிற்சியின் மூலம், ஐக்கிய இராச்சியத்தில் எமது நற்பெயரை தொடர்ந்தும் மேம்படுத்துவீர்கள் என்று நான் நம்புகின்றேன்’ என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு நாணயங்களை அனுப்பும் தொகையை அதிகரிப்பதற்கான அனைத்து வழிகளையும் நாடு ஆராய்ந்து வரும் வேளையில், இலங்கை இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு இது வழிவகுக்கும் என்பதை சுட்டிக்காட்டி, சுகாதாரக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் தொலைநோக்குப் பார்வையுடன் ஈடுபட்டுள்ள சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அதன் இணை நிறுவனங்களுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நியமனக் கடிதங்களைப் பெற்றவர்கள் மற்றும் இத்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்களை ஊக்குவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி நிஹால் டி சில்வா, சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் இணை நிறுவனர் கலாநிதி கித்சிறி எதிரிசிங்க மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## யாழ் மாநகர சபையிடம் திருப்பி கேட்டது ஜப்பான்




குப்பை லொறிகளை இறக்குமதி செய்வதில் கடந்த 3 வருடங்களாக ஏற்படும் தாமதங்கள் காரணமாக, குப்பை லொறிகளை இறக்குமதி செய்வதற்காக ஜப்பான் வழங்கிய நிதியை மீள செலுத்த வேண்டும் என ஜப்பான் யாழ் மாநகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நான்கு குப்பை லொறிகளை இறக்குமதி செய்வதற்காக ஜப்பான் வழங்கிய 14.3 மில்லியன் டொலர்களை மீள செலுத்த வேண்டும் என இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகம், யாழ் மாநகரசபைக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளது.

கடந்த 3 வருடங்களாக காலந்தாழ்த்தப்பட்ட இத்திட்டத்தை உங்களால் செயல்படுத்த முடியவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது என ஜப்பான் தூதரகம் மேயர் மணிவண்ணனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிக்கோயா இளைஞன் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

வ. சக்தி

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள தனியார் விடுதியில் இருந்து டிக்கோயா, லோவர் டிவிசனைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த விடுதியில் அறையை வாடகைக்கு எடுத்து,

மட்டக்களப்பிலுள்ள தனியார் வங்கியொன்றில் தொழில் புரிந்து வந்த இளைஞனே, சனிக்கிழமையன்று (27) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள இளைஞன் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான பீற்றர் போலின் உத்தரவுக்கு அமைய சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டார். பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தினை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

## பாதுகாப்பற்ற வீட்டில் இருந்த சிறுமிகள் மீட்பு

மெதிகிரிய யுடகனாவ பிரதேசத்தில் பாதுகாப்பற்ற நிலையில் வீடொன்றில் இருந்த இரு சிறுமிகளை மெதிரிகிரிய பொலிஸார் மீட்டுள்ளனர்.

9, 4 வயதுடைய சிறுமிகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர். இந்த சிறுமிகளின் தாயார் சுமார் 2 வருடங்கள் முன்னர் தனது கணவரையும் இரண்டு பெண் குழந்தைகளையும் விட்டுச் சென்றுள்ளார். அன்று முதல் இச்சிறுமிகளை தந்தையே வளர்த்து வந்துள்ளார்.

சிறுமிகளின் பாட்டியும் இந்த வீட்டிலேயே வசித்து வரும் நிலையில், வயது முதிர்ந்த பாட்டிக்கு தேவையான அனைத்தையும் சிறுமிகளே கவனித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுத்தமற்ற இந்த வீட்டில் சிறுமிகள் இருவரும் பாதுகாப்பற்ற நிலையில் வசித்து வருவதை உறுதி செய்த பொலிஸார், பசியில் இருந்த சிறுமிகளுக்கு உணவையும் வழங்கியுள்ளனர். மற்றொரு பொலிஸ் அதிகாரி சிறுமிகளுக்கு தேவையான உடை, கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

## எலிக்காய்ச்சலால் இராணுவ வீரர் மரணம்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் - கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ வீரர் ஒருவர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் குறித்த சிப்பாய் கடந்த 22ஆம் திகதி எலிக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட நிலையில் , முன்னதாக பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

பின்னர் அங்கிருந்த மேலதிக சிகிச்சைக்காக கடந்த 25ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் மறுநாள் 26ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ரஞ்சன் விடுதலை;

## ஆசை பயம் வேண்டாம்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கானப் போராட்டம் முடிவடைந்துவிட்டதாக எவரும் எண்ணிவிட வேண்டாம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று (27) முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ரஞ்னுக்கு பிரஜாவுரிமை இல்லை. ஆனாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் ரஞ்சனை இணைத்து க்கொள்வேன். சஜித்துக்கு ஆசை ஆனால் பயம் என சிலர் கூறினார்கள். எனக்கு வெட்கமும் பயமும் இருக்கிறது. ரஞ்சனுக்கு விடுதலையை பெற்றுக்கொடுப்பதில் எவரும் ஆசை, பயம் கொள்ள வேண்டாம். ரஞ்சனால் எவருக்கும் பிரச்சினை இல்லை. ஆனால் திருடர்களுக்கு ரஞ்சனைப் பார்த்து பயம் உள்ளது எனவும் தெரிவித்தார்.

## யானை தாக்கி மாணவி பலி

கண்டி, ஹசலக்க பகுதியில் பெற்றோருடன் விகாரைக்குச் சென்ற மாணவி, காட்டு யானைத் தாக்குதலில் பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விகாரையில் இடம்பெறும் தான நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று (28) அதிகாலை பெற்றோருடன் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இம்முறை கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த 17 வயதான மாணவியே உயிரிழந்துள்ளார்.

ஹசலக்க, 5 ஆம் பிரதேசத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்த பொலிஸார், மாணவியின் சடலம் ஹசலக்க வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.









## சைவமங்கையரின் கல்விக்கண்காட்சி



கொழும்பு சைவமங்கையர் வித்தியால மாணவ தலைவர் ஒன்றியம் 2022 ஏற்பாட்டில் மூன்று நாள் கல்விக்கண்காட்சி வெள்ளிக்கிழமை காலை அதிபர் அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் ஆரம்பமாகியது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபாரட்ணம் அதிரதன் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண இடமாற்ற சபை அமர்வுகளை

# புறக்கணிக்க தீர்மானம்

■ நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களது 2023 ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றுச் சபை தவிசாளராக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் நியமிக்கப்படுமிடத்து குறித்த இடமாற்ற சபையின் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதாக, அனைத்து முகமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்தும் சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜி முபாரக் ஒப்பமிட்டு, கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண பிரதமர் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் ஆகியோர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு பிரதேச சபையிலும் இல்லாதவகையில், வவுணதீவு பிரதேச சபையில் பதவி நிலை உதவியாளர் எனும் பதவி உருவாக்கப்பட்டு, அபிவிருத்தி உத்தியோகத்தருடன் அப்பதவிக்கான பொறுப்புகளாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்க்கு உரிய கடமைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என்னும் பதவி இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளமை மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க முன்னெடுப்புகளுக்கு பொருத்தமான தீர்வை பெற்றுக் கொடுக்க தவறியமையே இதற்கான காரணம் என சுட்டிக்காட்டி உள்ளனர்

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு செயலாளரின PA/CS/6/2/ combined இலக்க 2021.01.17 மற்றும் 14/2013 இலக்க 2013.07.14 திகதிய சுற்றறிக்கை மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட CS/DOS/21/01/02 இலக்க 2017.04.19 சுற்றறிக்கைகளுக்கு மாற்றமான செயல்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறியுள்ளார் இவ்வாறான அதிகாரியால் தொழிற்சங்க பிரதிநிதிகளின் கருத்துகளை கவனத்தில்கொண்டதாக, வருடாந்த இடமாற்றுச் சபையின் செயல்பாடுகள் நியாயமான முறையில் அமையாது என கருதுவதால் இந்த இடமாற்றச் சபையை புறக்கணிக்கும் விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளார்.



## இன்று வெருகல் கொடியேற்றம்

■ சகா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வெருகலம்பதி சித்திர வேலாயுதசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம், இன்று திங்கட்கிழமை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்தத தொடர்ந்து 18 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.



இராமகிருஷ்ண மிஷனுக்கு


## மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் மட்டக்களப்பு - கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் அமைப்புக்கு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன.

வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் மஞ்சள் மற்றும் தென்னம்பிள்ளை கன்றுகள் உள்ளடக்கிய 50 மரக்கன்றுகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜிடம் பிரதேச செயலக அதிகாரிகள் மரக்கன்றுகளை வழங்கிவைத்தனர்.



சொகுசு காரில்

## போதைப்பொருள் கடத்தல்; இருவர் கைதாகினர்

■ பாறுக் ஷிஹான்

நீண்டகாலமாக சொகுசு கார்களில் சூட்சுமமாக ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள்களை கடத்தி சென்றவர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் (27) மாலை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சொகுசு காரில் போதைப்பொருட்களுடன் பயணித்த இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதான நபர்கள், கல்முனைப்பகுதியை சேர்ந்த 44 மற்றும் 23 வயதுடையவர்கள் என்பதுடன், சந்தேகநபர்கள் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 6 கிராம் 80 மில்லிகிராம் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள் 5 கிராம் 580 மில்லி கிராம் உட்பட 4 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர்கள், சான்று பொருட்களுடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்ப டையினர் பாரப்படுத்தியுள்ளனர்.



## பொறுப்பதிகாரியாக அப்துஸ் ஸமத் நியமனம்

■ எம்.எஸ்.எம். நூர்தீன்



தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையின் காத்தான்குடி அலுவலக நிலைய பொறுப்பதிகாரியாக காத்தான்குடியைச் சேர்ந்த பொறியியலாளர் கே.எம்.அப்துஸ் ஸமத் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் காத்தான்குடி அலுவலக நிலைய பொறுப்பதிகாரியாக காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும் என்பதுடன், அவர் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

கடலரிப்பை கட்டுப்படுத்த

## தவறியமைக்கு எதிராக வழக்கு தாக்கல்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

திருக்கோவில் மற்றும் தம்பிலுவில் ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பை கட்டுப்படுத்த தவறியமைக்கு எதிராக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணி ஆ. முகம்மது பாறூக், இரு வழக்குகளை வெள்ளிக்கிழமை (26) தாக்கல் செய்துள்ளார்.

கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.கே. பிரபாத் சந்திர கீர்த்தி மற்றும் கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின்

அதிகரித்துள்ள

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்




கிளிநொச்சி, புனகரி பிரதேசத்துக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் என்பவற்றால் பெண்கள், சிறுவர்கள் பாதிக்கப்படுவதுடன், தாங்கள் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொள்வதாகவும் கிராம மட்ட அமைப்புகள் தெரிவிக்கின்றன.

முட்கொம்பன் கிராமத்தில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் போதைப்பொருள் பயன்பாடு என்பன அதிக அளவிலே காணப்படுவதாகவும் இதனால் இள வயதினர் இவற்றுக்கு அடிமையாகி வருவதாகவும் தங்களுடைய இளம் சமூகத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடும்ப வன்முறைகள் சிறுவர்கள் மீதான வன்முறைகள் என்பன அதிகரித்து காணப்படுவதாகவும் பூநகரி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பெண்கள் வலையமைப்பு உடனான சந்திப்பின் போது பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழில் பிரபல விடுதியில் தீ;

## கனடா நாட்டவரின் உடைமைகள் நாசம்



■ எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் (27) ஏற்பட்ட தீ விபத்தில் , விடுதி அறையில் தங்கியிருந்த கனடா நாட்டினை சேர்ந்தவர்களின் உடைமைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த விடுதியில் இவர்கள் தங்கி இருந்த விடுதி அறையில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த விடுதி அறையில் தீ விபத்து ஏற்பட்ட போது விடுதி பணியாளர்கள் விரைந்து செயற்பட்டமையால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புதுஐயன் குளத்தின்

## நீர்ப்பாசன தொகுதி துப்புரவு செய்யப்பட்டது



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி கம நல சேவை நிலையத்துக்குட்பட்ட காமக்கார அமைப்பினரின் வேண்டுகோலுக்கிணங்க, றகமா நிறுவனத்தினரால் புதுஐயன் குளத்தின் நான்கரை கிலோ மீற்றர் வரையான நீர்ப்பாசன தொகுதி, நேற்று (28) துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி -கரைச்சி பிரதேச செயலக அனுமதியுடன், கமநல சேவை திணைகளத்தின் ஆலோசனையுடன் குறித்த குளத்தின் நீர்ப்பாசன தொகுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டத்துக்காக குறித்த நீரர்ப்பாசன தொகுதியை பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளும் குடும்பங்களின் 90 வரையான மனித வலுக்கள் பயன்படுத்தப்பட்டு, அவர்களுக்கான உலருணவு பொருட்கள் றகமா நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்டன . உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் தேவைப்பாடுடைய 90 குடும்பங்களுக்கே இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன், குறித்த குளத்தின் கீழ் 114 ஏக்கர் நிலப்பரப்பிற்கான நீரை தடையின்றி வளங்கும் வகையில் நீர்ப்பாசன கால்வாய்களின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீதி புனரமைப்பு பணிகளை

## தவிசாளர் சுரேன் பார்வையிட்டார்



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளாலி பகுதியின் முன்பள்ளி வீதி இரண்டு மில்லியன் ரூபாய் பெறுமதியில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இப்புனரமைப்பு பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், நேற்று (28) நேரில் சென்று பார்வையிட்டார்.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த குறித்த வீதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடமும் தவிசாளரிடமும் பொது மக்கள் தொடர்சியான வேண்டுகோளை முன்வைத்திருந்தனர்.

அதை தொடர்ந்து குறித்த வீதிக்கான நிதியை சபையால் ஒதுக்கீடு செய்து குறித்த வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பணிகளை தவிசாளர் மற்றும் உப தவிசாளர், தமிழ் அரசுக் கட்சியின் கிளாலி வட்டாரக்கிளையின் தலைவரும் கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான நிக்சன் சபையின் உத்தியோகத்தர்களும் பார்வையிட்டனர்.

மானிப்பாயில்

## மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வீட்டில் இருந்தோர் தூக்கத்தில் இருந்த அதிகாலை வேளை, வீட்டு வளாகத்தினுள் அத்துமீறி உள்நுழைந்த வன்முறை கும்பல், வீட்டின் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை உடைத்து விட்டு, வீட்டின் முன் நின்ற மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றது.

இதனால் மோட்டார் சைக்கிள் முற்றாகவே எரிந்து நாசமாகியுள்ளது.

## போதைப்பொருளுடன் திருட்டு சந்தேகநபர் கைது

■ எம்.றொசாந்த் , வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் போதைப்பொருளுடன் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

80 கிராம் ஹெரோய்ன் , திருடப்பட்ட 7 சைக்கிள்கள் , 4 மின் மோட்டார்கள் , 02 எரிவாயு சிலிண்டர்கள் என்பன கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலிஸ்



சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வு:

# உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட அறுவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட 6 பேர் நோர்வூட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்னர்.

கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தின் சுற்றாடல் பிரிவுக்கு பொறுப்பானவர் என்றும் ஏனைய சந்தேகநபர்கள் மஸ்கெலியா மற்றும் நோர்வூட் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் ஆறு பேரும் மிக நீண்ட காலமாக இந்த சட்டவிரோத மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

போட்றி தோட்டத்திலுள்ள ஆற்றில் சந்தேகநபர்கள் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று (28) அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பிலேயே சந்தேகநபர்கள் 6 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஆறு பேரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நானுஓயா தீயில் வீடொன்று சேதம்

■ எஸ். கே. குமார்

நானுஓயா -எடின்பிரோ தோட்டத்தில் நேற்று முன்தினம் (27) இரவு இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவமொன்றில் வீடொன்றும் அவ்வீட்டிலிருந்த உடமைகளும் முற்றாக எரிந்து சாம்பலாகியதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 10 :30 மணியளவில் மின்சார கசிவு காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டதாகவும் சம்பவத்தின் போது வீட்டில் இரு பிள்ளைகள் உட்பட தாய் மாத்திரம் இருந்துள்ளதாகவும் இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில், உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து, நுவரெலியா மாநகர சபையிலிருந்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்ட போதிலும் பாதை வசதி இன்றி தீயணைப்பு வாகனம் தீ பற்றிய வீட்டுக்கு அருகில் செல்ல முடியவில்லை .

இதனால் சுமார் மூன்று மணித்தியாலப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மாகஸ்தோட்டம் கீழ் பிரிவு

# தோட்டக் கோவிலில் திருட்டு

■ எஸ். கே. குமார்

நுவரெலியா -மாகஸ்தோட்டம் கீழ் பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் (27) சனிக்கிழமை இரவு திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (28) காலை 6 மணிக்கு திறக்கும் பொழுது சுவாமியின் மூலஸ்தானம் திறந்திருந்துள்ளது.

அதனை தொடர்ந்து ஆலய நிர்வாக சபையினரும் தோட்ட பொது மக்களும் ஆலயத்தினுள் சென்று பார்த்த பொழுது, ஆலயத்தின் தெற்குவாசல் கதவு கண்ணாடி உடைக்கப்பட்டு கதவை திறந்து உள் நுழைந்த ததிருடர்கள் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களையும் ஆலய ஒலிபெறுக்கி உபகரணங்கள் மற்றும் ஆலய உண்டியலையும்



திருடி சென்றுள்ளார்கள்.

திருடப்பட்ட உண்டியலை ஆலமுற்றத்தில் உடைத்து பணத்தை எடுத்துக்கொண்டு உண்டியலை அங்கேயே விட்டு சென்றுள்ளனர்.

நுவரெலியா பொலிஸார் மோப்ப நாய்களுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் . சந்தேகத்தின் பெயரில் 6 பேரை பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்

# தோட்ட இளைஞர், யுவதிகளுக்கே வாய்ப்பு

■ ஜீவன் எம்.பி உறுதி எஸ்.கணேசன்

நாட்டில் கூடிய விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இடம்பெற போகின்றது என தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இந்த தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அந்தந்த தோட்டப்பகுதியில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு போட்டியிட வாய்ப்பளிக்க போவதாகவும் தெரிவித்தார்.

மஸ்கெலியா சாமிமலை மாக்கலை தோட்டத்தில் இரவு பகல் கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,




நாட்டில் விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் என தெரியவந்துள்ளது. அந்த தேர்தலில் பிரதேச மக்களை உள்ளடக்கிய தோட்டப்பகுதி இளைஞர், யுவதிகளை போட்டியிட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் பாரியளவில் வாக்குகளை அளித்து எங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்து அமைச்சு பதவிகளை பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட அரசாங்கத்தில் மக்கள் எதிர்பார்த்த அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இருந்தாலும், மக்களுக்கு சேவை செய்ய முடியாத அந்த அரசாங்கத்தில் இருந்து நாங்கள் விலகி விட்டோம். எதிர்காலத்தில் நாடு நல்ல ஒரு முன்னேற்றம் அடையும். அதன்போது மக்கள் எதிர்பாரக்கும் அபிவிருத்திகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடாக செய்வதற்கான வாய்ப்புகள் கிட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.







# மயூர அலங்கார கொடியேற்றம்

பதுளை மாநகர் அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான மயூர அலங்கார கொடியேற்றம் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. இதன்போது பூஜை நிகழ்வுகள் இடம்பெறுவதையும், சுவாமி உள்வீதி வலம் வருவதையும், தேவஸ்தான குருக்கள் உட்பட நிருவாக சபையினரையும் படங்களில் காணலாம். (எம். செல்வராஜா)

கண்டி கோடீஸ்வர பெண்மணியின்

# சந்தேகநபர்கள் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி, லேக் சுற்று வட்டத்தின் சந்திக்கு அண்மித்த பெரிய வீடொன்றில் தனியாக வசித்து வந்த, 64 வயதுடைய பெண்ணை கொலை செய்த சந்தேகத்தின் பேரில் பெண்ணின் மகளின் கணவரின் தந்தை மற்றும் மற்றுமொரு நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட 52 மற்றும் 62 வயதுடைய இரு சந்தேகநபர்களும் கடவத்தை மற்றும் தெல்கொட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பெண்ணை கொலை செய்யப் பயன்படுத்திய கத்தி, தெல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரின் வீட்டு பின்புறத்திலிருந்து கண்டுபிடிக்க ப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி பகல் 2 மணியளவில் தனிமையில் இருந்த இப்பெண் கழுத்தை அறுத்து கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.



# கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட மலைப்பாம்பு

■ என். ஆராச்சி

கேகாலை- தேவாலகம கந்தேகெதர பிரதேச கிணறு ஒன்றில் சிக்கியிருந்த மலைப்பாம்பு ஒன்று பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது.

8 அடி நீளமான குறித்த பாம்பு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டு வனத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி ஆற்றில் பாய்ந்த பல்கலைக்கழக

# மாணவனைத் தேடும் பணிகள் முன்னெடுப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி- பேராதனைப் பாலத்திலிருந்து மஹாவலி ஆற்றில் பாய்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

குறித்த இளைஞர் ஆற்றில் பாய்ந்த இடத்திலிருந்து பயணப் பை கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தேசிய, பல்கலைக்கழக அடையாள அட்டைகள், மடி கணினி, வங்கி அட்டைகள் இரண்டு, பரீட்சை வினாத்தாள்கள் என்பன காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய குறித்த இளைஞன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவன் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஆற்றில் பாய்ந்த இளைஞர், புளுகஹபிட்டிய-எஹலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆற்றில் பாய்ந்த இளைஞனைத் தேடும் பணிகள் கடற்படை, பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அன்று இசாலினி, இன்று ரமணி

# துயரக்கதை நீள்கிறது

■ மொஹொமட் ஆஸிக்

மலையகச் சிறுமி இசாலினியின் மரணம் இடம் பெற்று அதனை மறப்பதற்குள் வீட்டு வேலைக்கு, அனுப்பட்ட மற்றும் ஒரு மலையகச்சிறுமி மரணமடைந்துள்ளமை பாரிய கவலையை ஏற்படுத்தி உள்ளதாகவும் இது போன்ற துயரங்கள் தொடராது இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேணடும் எனவும் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் தெரவிக்கின்றது. கண்டிலுள்ள அதன் தலைமையகத்தில் நடத்திய ஊடாக சந்திப்பில் வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவி சத்யவாணி சரசகோபால் இதனை தெரிவித்தார்.

**“ தொழிலாளர் சட்டத்தில் வீட்டு வேலைத் துறையையும் இணைக்கும் படி, வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அன்று ஒரு இசாலினியை இழந்தோம். இன்று ஒரு ரமணியை இழந்துள்ளோம். எதிர்காலத்தில் இன்னும் பல இசாலினிகளையும், ரமணிகளையும் இழக்க இடமளிக்க கூடாது என கேட்டுக் கொள்கிறோம். எனவே, கம்பஹா பிரதேசத்தில் வீடு ஒன்றில், பணி புரிந்து கொண்டிருந்த சமயம் உயிரிழந்த, மஸ்கெலியாவைச் சேர்ந்த ரமணியின் மரணம் தொடர்பான முறையான விசாரணை இடம்பெற்று அது பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இது போன்ற நிலைமைகள் அடிக்கடி ஏற்பட, வீட்டு வேலைத் தொழில் தொடர்பாக



சரியான சட்ட திட்டங்கள் இன்மை ஒரு முக்கிய காரணமாகும். எனவே வீட்டு வேலைத் தொழிலாளர் தொடர்பாக சரியான சட்ட விதிகள் அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும்.

வீட்டு வேலைத் தொழில் தொடர்பாக சட்ட பாதுகாப்பு வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் கடந்த 10 வருடங்களுக்கு மேல் போராடி வருகிறது. இன்று நாட்டில் பல்லாயிரக்கணக்கான வீட்டு வேலை தொழிலாளர்கள் நாடாளாவிய ரீதியில் பணியாற்றிய போதும் அவர்களுக்கு சரியான சட்ட பாதுகாப்பு இன்மை காரணமாக இன்று பல்வேறு துஷ்பி ரயோகங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எல்லாக் காலக்கட்டங்களிலும் ஆட்சிக்கு வரும் அரசாங்கள் இது விடய மாக அக்கறை செலுத்தாத நிலையை காண்கிறோம்.

எனவே, தொழிலாளர் சட்டத்தில் வீட்டு வேலைத் துறையையும் இணைக்கும் படி, வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதேசசபை தவிசாளர்

# கழுத்தில்லாமல் தாலிக்கட்ட முயற்சிக்கிறார்

## சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

■ ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச சபை தவிசாளர் கழுத்தில்லாமல் தாலிக்கட்ட முயற்சிக்கிறார் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மாதாந்த சபை அமர்வு தவிசாளர் ஆனந்த ஹெட்டித்திகே தலைமையில் வெள்ளிக் கிழமை (26) நடைபெற்ற போது, ஆளும் முன்னணி கட்சி உறுப்பினர்களுக்கும்,சபை தவிசாளருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

கடந்த 2019 ஆண்டு முதல் இன்று வரை வலப்பனை பிரதேச சபை ஊடாக குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் இடம்பெறவில்லை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேச மக்கள் பயன் பெறும் வகையிலும் சபைக்கு வருமானம் வரும் வகையிலும் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

ஆகையால் சபையின் உள்ளூராட்சி சட்டவிதிகளுக்கு அமைய தவிசாளர் வரவு செலவு கணக்கு அறிக்கையை உறுப்பினர்களுக்கு சமர்பித்து நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.



# இப்படியொரு சந்தர்ப்பம் இனிமேலும் கிடைப்பது அரிது

கடந்தகாலத்தை படிப்பினையாகக் கொண்டு, நிகழ்காலத்தில் செயற்பட்டு, எதிர்காலத்தை திட்டமிடவேண்டும். இல்லையேல், எமக்குப் பின்னிருப்பவர்கள் அனைவரும், நம்மை தூற்றிக்கொண்டே இருப்பர் என்பதை ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அரசியலைப் பொறுத்தவரையிலும் 'சந்தர்ப்பம்' முக்கியமாகும்.

'சந்தர்ப்பவாத அரசியலை' கைவிட்டு, 'சந்தர்ப்பம்' கிடைக்கும்போது பயன்படுத்திக்கொள்வதே முக்கியமானது; அதற்காகக் காத்திருக்கவும் வேண்டும். எனினும், காலத்தை கடத்திவிட்டு, அநியாயம் செய்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என நினைப்பது முட்டாள்தனமாகும்.

ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு ஜனாதிபதியானார் என்பது, அனைவருக்கும் தெரிந்தவிடயமாகும். பல தோல்விகள், அவமானங்களைக் கடந்து, நெருக்கடியான சூழ்நிலையில், தன்னால் முடியுமென்ற தன்னம்பிக்கையில் ஜனாதிபதி ஆகியுள்ளார். அத்துடன், அனைவருக்கும் அழைப்பும் விடுத்துள்ளார்.

பல இணைந்து கொண்டுள்ளனர்; இன்னும் சிலர், எதிர்ப்பு அரசியலை மேற்கொண்டுள்ளனர். இனவாதத்தைக் கக்கி, புலிப்பூச்சாண்டியை காண்பித்து, தேசிய பாதுகாப்புக்கு பங்கமாகுமென வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு, இனிமேலும் அரசியலை செய்யமுடியாது. ஆகையால், காலத்தைக் கடத்தாமல் அதிரடியான முடிவுகளை எடுப்பதே சால சிறந்தது. ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ், அதிகாரங்களை பெற்றுக்கொள்ள காய்களை நகர்த்த வேண்டும். எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு. ஆகையால், பேச்சுவார்த்தைகளின் ஊடாகவே, அதிகாரங்களைப் பெற முயல வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், கிடைத்திருக்கும் நல்லதொரு சந்தர்ப்பம் இதுவாகும். இதைப் பயன்படுத்த வேண்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் அழைப்பானது, சாலவும் சிறந்தது. அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு, சகல தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரேயொரு தமிழ் அமைச்சர்; சிரேஷ்ட அமைச்சருமாவார். அவரது அழைப்பை தட்டிக்கழித்துவிடக் கூடாது. அவரை ஒரு தூதுவராகப் பயன்படுத்திக்கொண்டு, ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும்.

தற்போது இருக்கும் இந்தச் சூழ்நிலை, எதிர்காலத்தில் இருக்குமா என்பதை யூகிக்கமுடியாது. ஆனாலும் கிடைத்திருப்பது அரிய சந்தர்ப்பமாகும். இந்தச் சூழ்நிலையில், தங்களுடைய கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக, ஒரு பக்கத்தில் பயணித்துக்கொண்டு, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஆகக் குறைந்த அதிகாரங்களையேனும் பெற்றுக்கொள்ள வழிசமைக்க வேண்டும்.

தேர்தல்கள் நடத்தப்படுமாயின், புதுமுகங்களுக்கே கூடுதலான சாத்தியக்கூறுகள் உள்ளன. அவ்வாறானவர்கள் ஆட்சிபீடம் ஏறிவிட்டால் மீண்டும், 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாகிவிடும்; காலங்களும் இழுத்தடிக்கப்படும். பயணங்களின் திசைகளும் சிலவேளைகளில் மாறுபடக்கூடும்.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், புதியபுதிய கட்சிகள் உருவாகுமாயின், உரிமைகளை வென்றெடுப்பதற்காக இத்தனை ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் புஷ்வாணமாகிவிடும். ஆகையால், கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதே தமிழ்க் கட்சிகளுக்கு நல்லதாகும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிரான

# தென்இலங்கையின் விழிப்பு


என். கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, தென்இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிரான பிரக்ஞை அதிகரித்துள்ளது.

ஏறத்தாழ 44 வருடங்கள், அமலில் இருக்கும் ஒரு தற்காலிக சட்டம், இந்நாட்டின் நிறைவேற்றுத்துறையிடம், தான் நினைக்கும் எவரையும், பயங்கரவாதி என்ற சந்தேகத்தின் பெயரில், நீதித்துறையின் தலையீடின்றி, தடுத்து வைக்கக்கூடிய அதிகாரத்தை ஒப்புக்கொடுத்திருந்தது. இதுகுறித்து, தென்இலங்கை 44 ஆண்டுகள் கழித்தாவது, ஓரளவு விழித்துக்கொள்ள முனைவது, நல்ல விடயம்தான்.

இந்த விழிப்பை, தென்இலங்கை அடைய, 44 ஆண்டுகள் தேவைப்பட்டதற்குக் காரணம், இத்தனை காலமும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் எனும் 'வாள்', குறிப்பிடத்தக்க அளவுக்கு, இலங்கையின் பெரும்பான்மை இனத்தவரை நோக்கி வீசப்படவில்லை. முதலில் தமிழர்கள்; பிறகு முஸ்லிம்கள்; இடையில் கொஞ்ச மாக்ஸிஸவாதிகள், ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் என, பெரும்பான்மை இனத்துக்கு 'ஒவ்வாத' நபர்களாக முன்னிறுத்தப்பட்டவர்களையே பதம்பார்த்தது.

இதனால், இலங்கையின் பெரும்பான்மையினம், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கோரமுகம் பற்றி, பெரிதும் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆனால், இன்று, 'கோட்டா கோ ஹோம்' என்ற, இலங்கையின் பெரும்பான்மை இனத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு எதிராக, பயங்கரவாத தடுப்புச் சட்டம் எனும் 'கூர்வாள்' திரும்பலாம் என்ற நிலையில், அதற்கு எதிரான விழிப்பு, தென்இலங்கையில் உருவாவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில், பயங்கரவாத தடுப்புச் சட்டம் பற்றிய ஒரு மீட்டல், மீள்பார்வை காலப்பொருத்தம் மிக்கதாகும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிறப்பு 1977 - 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் தாக்குதல் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்றன. இது, அன்றைய ஜே. ஆர் ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக மாறிக்கொண்டிருந்தது.

குறிப்பாக, வடக்கில் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மீது, கொலைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தேறின. இவற்றில், பல தாக்குதல்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கமாகப் பொறுப்பேற்ற அறிக்கை, 1978 ஏப்ரல் 25 ஆம் திகதி வெளியானதன் பின்னர், ஜே. ஆர் ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதையொத்த ஆயுதக் குழுக்களையும் தடை செய்யும் சட்டத்தை, நாடாளுமன்றத்தில் 1978 மே மாதம் நிறைவேற்றியது. அத்துடன், வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட 38 பேரை, பொலிஸாரால் தேடப்படுவோர் பட்டியலில் வெளியிட்டிருந்தது.

இதன் பின்னர், பொலிஸாரும் இராணுவத்தினரும் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டபோதும், இந்த ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளைக் குறைக்க முடியவில்லை.

1978 செப்டெம்பர் ஏழாம் திகதி, இரத்மலானையில் உள்ள கொழும்பு விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இலங்கையின் தேசிய விமான சேவையான 'எயார் சிலோன்' க்குச் சொந்தமான 'அவ்ரோ' விமானம், விடுதலைப் புலிகளால் வெடிக்க வைக்கப்பட்டது. இந்தத் தாக்குதல், அரசாங்கத்தைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதுடன், ஆயுதக் குழுக்களுக்கு எதிராக, உடனடி அதிரடி நடவடிக்கையை எடுக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியிருந்தது.

உடனடியாகப் பொலிஸ், இராணுவம் போன்ற படையணிகளின் கெடுபிடிகள், நாடு முழுவதும் பலப்படுத்தப்பட்டன. இதனால், தமிழ் மக்கள் பல இன்னல்களைச் சந்திக்க நேரிட்டது. இதன் தொடர்ச்சியாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யும் சட்டத்துக்கு மாற்றாக, 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் 1979 ஜூலை மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.

பல இளைஞர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், அரசியல் ஆர்வலர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும், 'சந்தேகம்' என்ற ஒரே காரணத்தின் நிமித்தம், வேறு எந்த அடிப்படைச் சாட்சிகளினது தேவை இன்றி, கைது செய்யப்படவும் காலஎல்லை இன்றித் தடுத்து வைக்கப்படவும் இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டமும் அவசர காலச் சட்டமும் காரணமாக இருந்தன. ஏறத்தாழ மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக, கைது, தடுத்து வைத்தல் போன்ற எதேச்சாதிகாரத்தை, இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியது.

1978ஆம் ஆண்டின், குடியரசின் இரண்டாவது யாப்பின் 13ஆவது சரத்தானது, எதேச்சாதிகாரமான கைது, தடுத்துவைத்தல் மற்றும் தண்டனை என்பவற்றுக்கு எதிரான அடிப்படை உரிமையை உறுதி செய்கிறது. சுருங்கக் கூறின், ஒருவர் சட்டப்படியன்றி, வேறு எக்காரணத்தின் நிமித்தமும் கைது செய்யப்படவோ, தடுத்துவைக்கப்படவோ, தண்டனைக்கு உள்ளாக்கப்படவோ முடியாது. அப்படிச் செய்வதானது, அந்நபரின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

1978ஆம் ஆண்டின், குடியரசின் இரண்டாவது யாப்பின் மனித உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில், இந்தச் சரத்து உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், அதே அத்தியாயத்தின் 15 (7) சரத்தானது, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம், ஒழுக்கம், மற்றவர்களது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல், ஜனநாயக சமூகத்தில் பொதுநலன் நோக்கிலான, நியாயமான தேவைப்பாடுகள் ஆகிய காரணங்களுக்காக, 13 ஆம் சரத்து வழங்கிய அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம் என்கிறது. இந்தப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டுதான், நாம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நோக்க வேண்டும்.

### நிர்வாகத்துறையின் கையில் எதேச்சாதிகாரம்

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்டமானது, நபரொருவரைக் கைது செய்யும் நடைமுறை, கைது செய்த பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்டிய நடைமுறை என்பன பற்றிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

இதன்படி, கைதுசெய்யப்படும் நபரொருவரை 24 மணி நேரத்துக்குள் பொலிஸார், நீதவான் முன்பு ஆஜர்படுத்த வேண்டும். மேலும், விசாரணை செய்யக் காலம் வேண்டுமெனில், நீதிவான் உத்தரவுக்கமைய மேலும், 24 மணிநேரம் தடுத்து வைக்கப்படலாம்.

ஆகவே, கைது செய்யப்படும் நபரொருவர், எக்காரணம் கொண்டும் எதுவித குற்றச்சாட்டுகளும் இன்றி, 48 மணிநேரத்துக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட முடியாது.

இதற்கு விலக்காக, குறித்த நபரொருவர் குற்றமொன்றோடு சம்பந்தப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்க அல்லது நம்ப, அமைச்சருக்கு உரிய காரணங்கள் உண்டெனின், அந்நபரைக் கைது செய்யவும் அமைச்சரின் உத்தரவுப்படி, ஒரு முறைக்கு அதிகபட்சம் மூன்று மாதம் என்ற அடிப்படையில், அதிக பட்சம் 18 மாதங்கள் வரை தொடர்ந்து தடுத்து வைக்க முடியும் என்று, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஒன்பதாவது சரத்து, அமைச்சருக்கு (அதாவது, நிர்வாகத்துறைக்கு) அதிகாரத்தை வழங்கியது.

அதுமட்டுமல்ல, அந்நபரை எங்கு, எந்தச் சூழலின் கீழ் தடுத்து வைப்பது என்று தீர்மானிக்கும் அதிகாரத்தையும் அமைச்சருக்கு, அதேசரத்து வழங்கியது. அத்தோடு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 10ஆவது சரத்தானது, ஒன்பதாவது சரத்தின் கீழமைந்த அமைச்சரொருவரின் உத்தரவானது, எந்த நீதிமன்றத்தின் முன்பும் கேள்விக்கு உட்படுத்தப்பட முடியாது என்று குறிப்பிட்டது.

ஆகவே, நீதித் துறையின் தலையீடின்றி, நபரொருவரை அமைச்சரின் எண்ணத்தின்படி கைது செய்யவும், அதிக பட்சம் 18 மாதங்கள் வரை அமைச்சர் எண்ணும் இடமொன்றில் தடுத்து வைக்கவும் கூடிய, பயங்கரமானதோர் எதேச்சாதிகாரத்தை நிர்வாகத்துறைக்கு, இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டம் வழங்கியது. இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தோடு அவசரகாலச் சட்டமும் இணையும்போது, நிலைமை இன்னும் மோசமாகும். அவசரகாலச் சட்டத்தின் கீழ், அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது, நபரொருவரைக் கைது செய்து, எல்லையற்ற காலம் தடுத்து வைக்கும் அதிகாரமானது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படுவதே இங்கு யதார்த்தமாகும். அத்தோடு அவசரகாலச் சட்ட ஒழுங்குகளின் கீழ் கைது செய்யப்படும் நபரொருவரை, பொலிஸ்மா அதிபர் தீர்மானிக்கும் இடமொன்றில், அவரது வழிகாட்டலின் படி தடுத்து வைக்க முடியும் என்ற ஏற்பாடும் காணப்பட்டது.

ஆகவே, பயங்கரவாத தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் தனிநபர்களைக் கைது செய்து, தடுத்து வைக்கும் அதிகாரத்தை நிர்வாகத் துறைக்கு வழங்கியது. தடுத்து வைக்கும் இடங்களைத் தீர்மானிக்கும் பலம் அமைச்சருக்கு இருந்தமையால், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பலரும், தடுப்புக் காவல் சிறைகளில் அல்லாமல், இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதாகப் பரவலான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

ஆகவே, பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், ஒரு குடிமகனுக்கு அரசியலமைப்பு வழங்கும் அடிப்படை பாதுகாப்பைக் கூட, இல்லாதொழிக்கத்தக்க பலத்தை, நிர்வாகத்துறையிடம் சரணடையச் செய்துள்ளது என்றால் மிகையல்ல.

(அடுத்த திங்கட்கிழமை தொடரும்)



## வாழ்வியல் தரிசனம்

அற்புதங்கள் உங்களுக்குள் இருக்கின்றன. அதைப் புரியாமல் அநேகர் இருக்கின்றனர். மிகப்பெரிய திறமை உள்ளவர்களும், தங்களைப் பற்றிக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர்.

இதை உணர்ந்து, செயலில் ஈடுபடும்போது, அவர்கள் நினைத்த உயர்நிலையை அடைந்துவிடுகின்றனர். தங்களுடைய திறமைகளைக் கண்டுபிடித்தால், அயராத முயற்சி தானாகவே சித்திகளை உருவாக்கிவிடும்.

எங்களுக்குள் மகாசக்தி உள்ளது. இது யாவருக்கும் கடவுளால் அருளப்பட்டது. இதை அறிவு மூலம் தெரிந்துகொண்டால், தீவிரமான சக்தி பிறக்கின்றது.

இதை அறிந்தும் தெளியாமல் சோம்பிக் கிடப்பது, பெரும் தப்புச் செய்தவர் போலாகி விடுகின்றனர். உண்மை, துணிச்சல், விடாமுயற்சி, கடவுள் பக்தி போன்றவை இணைந்தால், எல்லாமே வெற்றியில் அமையும்.

உயர்நிலைக்கு வருவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. பலவீனங்கள் அகற்றப்படவேண்டும். அனைவரும் முன்னேறினால், முழு உலகமும் சுபீட்சமாகிவிடும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விலை குறைப்பை அமல்படுத்தாத

### வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை தேவை

பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், மிளகாய், முட்டை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள், குறைவடைந்து உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டொலரின் ஸ்திரத்தன்மை, வங்கிகள் டொலர்களை வழங்குதல் என்பன காரணமாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

ஆனாலும், விலைகுறைப்பு அறிவித்தல்கள் இப்படி இருக்க, வர்த்தகர்கள், வியாபாரிகள், தமது வர்த்தக நிலையங்களில் இன்னும் விலை குறைப்புச் செய்யவில்லை. "ஏற்கெனவே, கொள்வனவு செய்த பொருட்கள் முடிந்த பின்னர்தான், விலை குறைப்பு நடக்கும்" என நுகர்வோருக்கு வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், கடந்த காலங்களில் விலை கூட்டப்பட்டு, அடுத்த நிமிடமே விலையைக் கூட்டி விற்பனை செய்த வர்த்தகர்கள், விலையை குறைத்தால் மாத்திரம் இப்படியான நொண்டிச்சாட்டுகளைத் கூறுகின்றனர் என, நுகர்வோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அண்மையில், முட்டையின் நிர்ணய விலை 43 ரூபாயாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றும் முட்டை 60-65 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுகின்றது.

இது தொடர்பில், நுகர்வோர் அதிகார சபையினர் உட்பட, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு தீர்வை பெற்றுத்தர முன்வர வேண்டும் என்றும் நுகர்வோர் கேட்டுக்கொள்கின்றனர்.

– நூருல் ஹுதா உமர்

# சில பொருட்களின் இறக்குமதிக்கு அனுமதி

நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது நிர்மாணத் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக தரை ஓடுகள் (டைல்கள்) இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

தரைஓடுகள் மற்றும் கற்கள் (HS குறியீடுகள் 25.16, 25.16, 68.02, 68.10) ஆகியன நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் சொந்தத் திட்டங்களில் பயன்படுத்தும் நோக்கத்திற்காக மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றை மீள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.



அதன் பிரகாரம் முதலீட்டு சபையின் கீழ் வராத அனுமதி பெற்ற தொடர்மனைகள், கலப்பு அபிவிருத்தித் திட்டங்கள், அனுமதி பெற்ற ஹோட்டல்கள் மற்றும் அரசாங்கத் திட்டங்கள் போன்றவற்றுக்கு இந்த இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதியளிப்பில் முன்னெடுக்கப்பட்டும் திட்டங்களுக்கான நிர்மாணத்துறை பயன்பாட்டு வாகனங்கள் இறக்குமதிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சார சைக்கிள்கள் இறக்குமதிக்கும் ஜனாதிபதியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# Business Against Corruption அறிமுகம்

இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு ஊழலே அடிப்படை காரணம் என பல ஆய்வாளர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது வர்த்தக, பொது மற்றும் அரச மட்டங்களில் காணப்படுகிறது. நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் நிலைத்திருக்கக்கூடிய தன்மை என்பவற்றை உறுதி செய்யும் நோக்கில் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண தேசிய மட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஊழல் செயற்பாடுகளானது முதலீட்டுக்கு ஆபத்தை உருவாக்கும் அதேவேளை முதலீட்டுக்கான ஆர்வத்தையும் வலுவிழக்கச் செய்கிறது. மேலும் தவறான வள ஒதுக்கீடுக்கு வழிவகுத்தல், நிச்சயமற்ற தன்மையினை உருவாக்குதல் மற்றும் அதிக சமூக செலவுகளையும் ஏற்படுத்துகிறது. ஊழல் செயற்பாடுகளை குறைத்தல் அல்லது தடுத்தல் என்பது இலங்கையினை நீண்ட கால முதலீட்டுக்கான சிறந்த மற்றும் கவர்ச்சிகரமான முதலீட்டு மையமாக மாற்றியமைக்கும்.

இலங்கையில் பல வருடகாலமாக ஊழலானது நிலைக்கொண்டுள்ள நிலையில் அது தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. உலகளாவிய அமைப்பான ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் (TI) நிறுவனத்தின் மிக சமீபத்திய ஊழல் மதிப்பாய்வுச் சுட்டியின் (2021 ஆம் ஆண்டின்) அடிப்படையில் இலங்கையானது 102 ஆவது இடத்தில் காணப்படுகிறது. இந்த மதிப்பாய்வுச் சுட்டியானது உலகெங்கிலுமுள்ள 180 நாடுகள் மற்றும் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெறுகின்ற பொதுத் துறை சார்ந்த ஊழல்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்படுகின்றது. "ஆட்சியை வலுப்படுத்தவும் ஊழல் செயற்பாடுகளை குறைக்கவும் முயற்சிகள் தொடரப்பட வேண்டும்" என குறித்த மதிப்பாய்வு அறிக்கையின் பிரிவு IV பரிந்துரைக்கிறது. ஊழலைத் தடுப்பதற்கும் அவற்றை எதிர்ப்பதற்கும் வணிகத்துறைக்கு (corporates) வலுவான சட்ட ஏற்பாடுகள் காணப்படாத நிலையில், வணிக துறைசார் நிறுவனங்கள் அவர்களது நேர்மைத்தன்மை மற்றும் நெறிமுறைகளை முறையாக நிலைநிறுத்த தேவையான சர்வதேச ரீதியிலான நடைமுறைகள் மற்றும் மாற்று தன்னார்வு வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது கட்டாயமாகும்.

நிறுவனங்களின் பரிவர்த்தனை மற்றும் மூலோபாய திட்டமிடல் மட்டங்களில் ஊழலுக்கு எதிராக அவர்களது உள்ளக வினைத்திறனை வலுப்படுத்தக்கூடிய கூட்டு வணிக நடவடிக்கைகளின் பங்காளர்களாக, ஊழலை ஒழிப்பதற்கு அவசியமான நாட்டின் தேவைக்கு பதிலளிக்கும் வகையில் வணிக நிறுவனங்கள் முன்னோக்கி செல்ல வேண்டிய




நேரம் இதுவென இலங்கை பணிப்பாளர்கள் அமைப்பு (SLID) நம்புகிறது.

நாம் தற்போது எதிர்கொள்வது போலான நெருக்கடியானது நாட்டு மக்களையும் அவர்களுடன் தொடர்புடைய முறைமையினையும் சிதைக்கக்கூடியதாகும். நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் நாம், குறுகிய கால நலன்களுக்கு அப்பால் நீண்ட கால அடிப்படையில் நாட்டின் நலன் மற்றும் சிறந்ததைத் ஆரம்பிக்க வேண்டும். நமது நாட்டின் இந்த திருப்புமுனையில், பொருத்தமான நீண்ட கால கட்டமைப்பு மாற்றங்களைச் செய்வது இன்றியமையாததாகும். Business Against Corruption என்ற கருப்பொருளின் கீழ் மூலோபாய ஒத்துழைப்புடன் ஒரு புதிய முயற்சியை அறிமுகப்படுத்தும் நோக்குடன் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஶ்ரீ லங்கா (TISL) நிறுவனத்துடன் SLID அமைப்பானது அண்மையில் இணைந்து கொண்டது. இந்த கருப்பொருளின் கீழ், நிறுவன மட்டத்தில் வெளிப்படக்கூடிய ஊழல் அபாயங்களை குறைக்கும் நோக்குடன் வணிகங்களுக்கு தேவையான செயற்பாடுகளை எளிதாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கும் குறித்த இரு நிறுவனங்களும் இணைந்து செயற்படவுள்ளது. எதிர்வரும் மூன்று ஆண்டு காலப்பகுதிக்குள், வணிக நிறுவனங்களின் வலுவான உள்ளக வினைத்திறனான கட்டமைப்பை உருவாக்கி நெறிமுறைசார் வணிக நடவடிக்கைகள், நியாயமான சந்தைப் போட்டி, நியாயமான விலையிடல், நம்பத்தகுந்த தலைமைத்துவம் போன்றவற்றை வணிகங்களுக்கு இடையே ஊக்குவித்து அதனூடாக அவர்களின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மைத்தன்மை ஆகியவை தொடர்பிலான சிறந்த புரிந்துணர்வை உருவாக்க முயல்கிறது. இவை தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளான, முக்கிய பங்குதார்களை கலந்துரையாடல்களில் ஈடுபடுத்தல், குறித்த விடயம் தொடர்பான சிறந்த நடைமுறைத் திட்டங்களை உள்ளடக்கிய பயிற்சிப் பட்டறைகள் நடாத்துதல் போன்றவற்றினூடாக குறித்த பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை வணிக நிறுவனங்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் செயல்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SLID அமைப்பின் தலைவரான பைசல் சாலிஹ் கூறுகையில், "நாட்டின் தற்போதைய விவகாரங்கள், அடிப்படையான யதார்த்தங்கள் மற்றும் வணிக செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களின் சவால்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துக்கொன்றோம். ஆகவே, இந்த பயணத்தில் எமது அணுகுமுறையானது நடைமுறைக்கேற்றதாகும். ஆகவே தன்னார்வாக 'சிறந்த முயற்சிகள்' என்ற அடிப்படையில், வணிகங்களுக்கு கட்டுப்பாட்டு அளவீடுகள், மற்றும் ஒன்றுடன் ஒன்றை சரிப்பார்த்தல் (checks and balances) முறைகளை பயன்படுத்தி ஊழல் அபாயத்தினை படிப்படியாக குறைத்துக்கொள்ள உதவும்" என குறிப்பிட்டார்.

TISL நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான நதிஷானி பெரேரா குறிப்பிடுகையில், "ஊழலுக்கெதிரான எந்தவொரு தேசத்தின் முயற்சிகளிலும் வணிகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலங்கையின் வரலாற்றுமிக்க இந்த தனித்துவமான தருணத்தில், ஊழலுக்கெதிராக குடிமக்கள் எழுச்சி பெற்றுள்ள நிலையில், வணிக சமூகமும் இந்த இலக்கினை நோக்கி தமது பங்களிப்பினை வழங்குவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனடிப்படையில், குறித்த 'Business Against Corruption' எனும் புதிய முயற்சியை ஆதரித்து நாட்டிற்கான புதிய நம்பிக்கையுடன் SLID அமைப்புடன் இணைந்து செயற்படுவதனை TISL நிறுவனம் பெருமையாக கருதுகிறது" என குறிப்பிட்டார்.

நாட்டின் ஒருமைப்பாட்டினை உயர்த்தி ஓர் சிறந்த முதலீட்டு மையமாக எமது நாட்டினை மாற்றுவதற்கு வணிக சமூகத்துடன் நெருக்கமாக பணியாற்ற SLID அமைப்பு மற்றும் TISL நிறுவனம் என்பன உறுதிபூண்டுள்ளன.

சென்னை

# ஜெயலலிதா மரணத்தில் மர்மம் உள்ளதா?

## நீதிபதி ஆறுமுகசாமி பதில் அளித்துள்ளார்



தமிழ்நாட்டின் முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா மரணம் குறித்து அமைக்கப்பட்ட நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையம் இறுதி அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

தலைமை செயலகத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை ஆணைய இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார். இந்த அறிக்கை விரைவில் சட்டமன்றத்தில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த நீதிபதி ஆறுமுகசாமி,

விசாரணை தொடங்கி 1 ஆண்டுக்குள் 149 சாட்சிகளை விசாரித்தோம். இந்த வாதத்தை உச்ச நீதிமன்றத்தில் வைத்தபோது, இந்த ஆணையமானது ஒரு நீதிமன்றத்தைப் போல செயல்பட்டுள்ளது என பாராட்டியது. ஒரு ஆண்டுக்குள் அனைத்து சாட்சியத்தையும் விசாரித்துவிட்டோம் என்பது தான் உண்மை.

ஜெயலலிதா மரணம் மர்மமானதா? என்பது குறித்து அறிக்கையில் தான் கூறமுடியும். ஆங்கிலத்தில் 500 பக்கம், தமிழில் 608 பக்கம் அறிக்கையில் உள்ளது. 3 பகுதிகள், சாட்சியங்களின் சுருக்கத்தன்மை ஆகியவற்றை கொடுத்துள்ளோம். அறிக்கையை வெளியிடலாமா? என்பதை அரசாங்கம் தான் முடிவு செய்யவேண்டும்.

வழக்கில் சசிகலாவுக்கு சம்மன் கொடுத்தோம். பின்னர் நேரில் ஆஜராக வாய்ப்பு கொடுத்தும். அவர் தான் விசாரணைக்கு ஆஜராகவில்லை என எழுதிக்கொடுத்தபின்னர் நான் ஒருவரை கட்டாயப்படுத்துவது நீதிமன்ற நடைமுறையில் சரியாக இருக்காது. அவர் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்துள்ளார்.

விசாரணை 13 மாதம் நடந்துள்ளதே தவிர 4 ஆண்டுகள் அல்ல. அப்பல்லோ மருத்துவமனையில் ஜெயலலிதாவுக்கு நல்ல சிகிச்சை தான் வழங்கப்பட்டதா? என்பது குறித்த கேள்விக்கு விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளேன்.

ஆணையம் யாரையாவது சந்தேகப்படுகிறதா? என்ற கேள்விக்கு பதில் அறிக்கையில் உள்ளது. இது குறித்து பதில் அளித்தால் அறிக்கையை வெளியே சொல்வதுபோன்றதாகும்.


அதற்கு பதிலளித்த நீதிபதி ஆறுமுகசாமி, அதை அங்கு ஒருவர் செய்கிறார். அவரால் முடிகிறது செய்கிறார். விளம்பர யுக்திக்காக செய்கிறார். அதை நான் என்ன கூற முடியும்.

வீட்டில் இருந்து ஜெயலலிதா கொண்டு செல்லப்பட்டதில் எந்த சந்தேகமும் இல்லை. ஜெயலலிதாவின் உடல்நிலை, அவரது பழக்கவழக்கங்கள், அவர்கள் உடலை எவ்வாறு பார்த்துக்கொண்டனர், யார் அவர் உடல்நிலையை கவனித்தனர் என்பதை எல்லாம் விசாரித்துள்ளோம்.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக எழுந்த சந்தேகங்கள் அனைத்திற்கும் முடிந்த வரையில் அறிக்கையில் பதில் அளித்துள்ளேன். எனக்கு தெரிந்ததை எழுதியுள்ளேன். நான் எழுதியது மிக குறைவு. சாட்சியம் பற்றி தான் நிறைய கூறியுள்ளேன். என் எதுவுமே எனது கருத்தை தனிப்பட்டு அதிகம் கூறவில்லை என்றார்.

சித்ரதுர்கா

# 2 மாணவிகள் பலாத்காரம்: மடாதிபதி உட்பட ஐவர் கைது



கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மாணவிகள் இருவரை தொடர்ந்து பலாத்காரம் செய்து வந்ததாக முருக மடத்தின் மடாதிபதி உள்பட 5 பேர் மீது 'போக்சோ' சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் உள்ள முருக மடத்தில் தங்கும் விடுதியுடன் கூடிய பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகிறது. அங்கு பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவிகள் இருவரை, மடாதிபதி இவ்வாறு பலாத்காரம் செய்துவந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவிகள் மைசூருவில் உள்ள சமூக சேவை அமைப்பில் இதுபற்றி தெரிவித்தனர். இதையடுத்து அந்த அமைப்பினர் குழந்தைகள் பாதுகாப்பு மையத்தை தொடர்புகொண்டு நேர்ந்த கொடுமை குறித்து கூறினர்.

அதன்பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனையடுத்தே மடாதிபதி உள்பட ஐவர் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட 2 மாணவிகளையும் மீட்ட பொலிஸார் குழந்தைகள் காப்பகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

சென்னை

# பொதுக்குழு ஒரு நாடகம்



பொதுக்குழு என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி தரப்பினர் நாடகம் நடத்தியதாக ஓ பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே தொண்டர்கள் விருப்பம் என்று ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார். பொதுக்குழு என்ற பெயரில் அவர்கள் நாடகம் நடத்தினார்கள் என்றும் தெரிவித்துள்ள ஓ.பன்னீர் செல்வம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

சசிகலா, டிடிவி தினகரனை சந்தித்து ஆதரவு கேட்பீர்களா? என்று ஓ.பன்னீர் செல்வத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த ஓ பன்னீர் செல்வம், அ.தி.மு.க.,வின் நலனுக்காக எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுடன் அரசியலில் பயணித்தவர்களை நேரில் சந்தித்து ஆதரவு கேட்பேன்"என்று பதிலளித்துள்ளார்.

இந்தியா

# இந்திய கடற்படைக்கு ஐ.என்.எஸ் போர்க்கப்பல்



இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர் கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்த் -ஐ வருகின்ற 2 ம் திகதி பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.


அடுத்தாண்டு இறுதிக்குள் இது முழுமையாக செயற்பாட்டுக்கு வருமென கடற்படை தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படையில் பணியாற்றிய, பிரிட்டனிடமிருந்து வாங்கப்பட்ட விக்ராந்த், விராட் ஆகிய இரண்டு போர்க் கப்பல்களும் ஓய்வு பெற்றுவிட்டன. ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட ஐஎன்எஸ் விக்ரமாதித்யா மட்டுமே தற்போது சேவைகள் இருந்து வருகிறது.

1971களில் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட போரின் போது முக்கிய பங்காற்றிய விக்ரம் கப்பலில் நினைவாக உள்நாட்டிலேயே தயாராகி இருக்கும் விமானம் தாங்கி போர்க்கப்பலுக்கும் ஐ.என்.எஸ் விக்ராந்த் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பிரம்மாண்ட போர்க்கப்பலின் தொடக்க விழா செப்டெம்பர் 2ம் திகதி கொச்சியில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கிறார்.

# சபர்மதி பாலம்



குஜராத் மாநிலம் அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆற்றை பொதுமக்கள் கடக்க வசதியாக நடைபாலத்தை மாநில அரசு அமைத்துள்ளது.

கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி, சனிக்கிழமை திறந்து வைத்தார். பாலத்துக்கு அடல் நடைமேம்பாலம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

அத்துடன், காதி உற்சவத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். அப்போது 7,500 பெண்கள் ஒரே நேரத்தில் ராட்டையில் நூல் நூற்று வரலாற்றுச் சாதனை படைத்தனர்.



## ஆசியக் கிண்ணம்:

# இலங்கையைத் தோற்கடித்த ஆப்கானிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரில், டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இலங்கையுடனான குழு பி போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

தொடரின் முதற் போட்டியாக இடம்பெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் மொஹமட் நபி, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக வேகப்பந்துவீச்சாளர்கள் மதீஷ பத்திரண, டில்ஷான் மதுஷங்க ஆகியோர் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தனர்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, முதலாவது ஓவரிலேயே பஸல்ஹக் பரூக்கியிடம் குசல் மென்டிஸ், சரித் அஸலங்கவை இழந்தது. அடுத்த ஓவரில் சர்ச்சைக்குரிய விதத்தில் நவீன்-உல்-ஹக்கிடம் பதும் நிஸங்க வீழ்ந்தார். நிஸங்கவுக்கு ஆடுகள நடுவரால் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டு மீள்பரிசீலனை செய்யப்பட்டபோது துடுப்பை பந்தைக் கடந்து செல்லும்போது அதிர்வேதும் இல்லாதபோதும் அது ஆட்டமிழப்பாகவே வழங்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து பானுக ராஜபக்‌ஷவும், தனுஷ்க குணதிலகவும் ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முஜீப் உர் ரஹ்மானிடம் குணதிலக வீழ்ந்தார். குறிப்பிட்ட நேரத்தில் அடுத்து வந்த வனிடு ஹஸரங்கவும் ரஹ்மானிடம் வீழ்ந்தார். பின்னர் அணித்தலைவர் தசுன் ஷானக நபியிடம் வீழ்ந்ததோடு, 38 (29) ஓட்டங்களைப் பெற்ற ராஜபக்‌ஷ, மகேஷ் தீக்‌ஷன ஆகியோர் அடுத்தடுத்து ரண் அவுட்டாகியிருந்தனர்.

இறுதியில் நபியிடம் மதீஷ பத்திரணவும் வீழ்ந்ததோடு, இறுதி வரையில் போராடிய சாமிக கருணாரத்ன 31 (38) ஓட்டங்களோடு பரூக்கிடயிடம் விழ 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.

பதிலுக்கு 106 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 40 (18), ஹஸரத்துல்லாஹ் ஸஸாயின் ஆட்டமிழக்காத 37 (28) ஓட்டங்களோடு 10.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பரூக்கி தெரிவானார்.

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் பங்களாதேஷை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

## இரண்டாவது டெஸ்டில்

# இனிங்ஸால் தென்னாபிரிக்காவை வென்ற இங்கிலாந்து



தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஓல்ட் ட்ரபோர்ட்டில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டில் இனிங்ஸ் மற்றும் 85 ஓட்டங்களால் இங்கிலாந்து வென்றது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 151/10 (துடுப்பாட்டம்: ககிஸோ றபாடா 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 3/32, ஸ்டூவர்ட் ப்றோட் 3/37, பென் ஸ்டோக்ஸ் 2/17, ஜேக் லீச் 1/11, ஒலி றொபின்ஸன் 1/48)

இங்கிலாந்து: 415/9 (துடுப்பாட்டம்: பென் போக்ஸ் ஆ.இ 113, பென் ஸ்டோக்ஸ் 103, ஜொனி பெயார்ஸ்டோ 49, ஸக் குறொலி 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்றிச் நொர்கியா 3/82, கேஷவ் மஹராஜ் 2/78, ககிஸோ றபாடா 2/110, லுங்கி என்கிடி 1/61, சைமன் ஹார்மர் 1/73)

தென்னாபிரிக்கா: 179/10 (துடுப்பாட்டம்: கீகன் பீற்றர்ஸன் 42, றஸி வான் டர் டுஸன் 41 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒலி றொபின்ஸன் 4/43, ஜேம்ஸ் அன்டர்சன் 3/30, பென் ஸ்டோக்ஸ் 2/30, ஸ்டூவர்ட் ப்றோட் 1/24)

போட்டியின் நாயகன்: பென் ஸ்டோக்ஸ்

## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ் றோமா போட்டி



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், றோமாவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஸன் விளாகோவிச் பெற்றதோடு, றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை தம்மி ஏப்ரஹாம் பெற்றிருந்தார்.

## ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

# சமநிலையில் மியூனிச்மொச்சென்கிளெட்பா போட்டி



ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச்சின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பொரூசியா மொசென்கிளெட்பா சமப்படுத்தியிருந்தது.

மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை லெரோய் சனே பெற்றதோடு, மொச்சென்கிளெட்பா சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க்கஸ் துராம் பெற்றிருந்தார்.

அமெரிக்கா

# மீட்கப்பட்ட 25 ரகசிய ஆவணங்கள்;சிக்கினார் ட்ரம்ப்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புளோரிடா இல்லத்தில் நடத்தப்பட்ட FBI சோதனையின் போது மீட்கப்பட்ட 15 பெட்டிகளில் 14 ரகசிய பதிவுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் தோல்வி அடைந்ததை அடுத்து, வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறும் போது ரகசிய ஆவணங்களை எடுத்து சென்றதாகவும், அதனை அவரது பங்களாவில் மறைத்து வைத்து இருப்பதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

இதனை அடுத்து புளோரிடா மாகணத்தில் உள்ள அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மார்-ஏ-லகோ பங்களாவில் கடந்த 8 ஆம் தேதி FBI அதிகாரிகளால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 15 பெட்டிகள் வரை மீட்கப்பட்ட நிலையில், இவற்றில் 14 ரகசிய பதிவுகள் உள்ளதாகவும், அதில் 25 ஆவணங்கள் மிக ரகசியமானவை என்றும் வாக்குமூலம் ஒன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 8 அன்று Mar-a-Lago பங்களாவில் நடத்தப்பட்ட தேடுதலுக்கான நியாயத்தை விளக்கி அமெரிக்க நீதித்துறை பகுதி-தடைசெய்யப்பட்ட வாக்குமூலத்தை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணம் அதன்



திருத்தப்பட்ட வடிவத்தில் கூட தற்போதைய குற்றவியல் விசாரணை பற்றிய புதிய விவரங்களை வழங்குகின்றது, இவை ட்ரம்பிற்கு கூடுதலாக புதிய சட்ட ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆக்லாந்து

# சூட்கேஸில் அழுகிய சடலங்கள்

**அச்சத்தில் உறைந்த மக்கள்**



ஆக்லாந்தில் அண்மையில் கைவிடப்பட்ட பொருட்களுக்கான ஏலமொன்று நடைபெற்றுள்ளது. குறித்த ஏலத்தில் பயணப் பெட்டியொன்றும் ஒன்று இருந்துள்ளது. இந்நிலையில் குறித்த பயணப் பெட்டியை விலைகொடுத்து வாங்கிய குடும்பத்தினர் அதனை திறந்து பார்த்த போது அதில் அழுகிய நிலையில் சடலங்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். இதனையடுத்து இது குறித்து உடனடியாக காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். இச்சம்பவமானது அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்து புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சடலங்களை சோதனை செய்ததில், சமீபத்தில் அவை பத்து வயதுக்குட்பட்ட 2 குழந்தைகளுடையது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீனைப் பார்த்து அஞ்சும் மக்கள்

பிரி



பிரித்தானியா மற்றும் அயர்லாந்து முழுவதும் காணப்படும் வீவர் (Weever ) எனப்படும் ஒரு வகை சிறிய மீன்கள் குறித்து ரோயல் நேஷனல் லைஃப்போட் இன்ஸ்டிடியூஷன் (RNLI) எச்சரித்துள்ளது.

குறிப்பாக மனிதர்களை மயக்கமடையச் செய்யும் விஷப் பொருளைக் கொண்ட கொடிய கொடுக்கை கொண்டு இம் மீன்கள் காணப்படுவதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

மேலும் வெளிர் நிறம் கொண்ட இம் மீன்கள் மணலில் எளிதில் கலந்துவிடுவதோடு அவை தங்களின் பெரும்பாலான நேரத்தை மணலில் புதைத்து தங்கள் முதுகுப் பகுதியை மட்டும் தரைக்கு மேலே தெரியும்படி செலவிடுவதாகவும், அம் மீன்கள் முதுகில் கொடுக்குகள் போன்ற மூன்று விஷமுள்ள முதுகெலும்புகள் உள்ளதாகவும், இதன் மூலம் அவை தம்மைப் பாதுகாத்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரித்தானிய மற்றும் அயர்லாந்து கடற்கரைக்கு செல்பவர்களுக்கு தீங்கிழைக்கும் இந்த விஷ மீன்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு RNLI எச்சரிக்கை விடுத்துள்ளது.

வீவர் மீன் குத்தினால் மனிதர்களுக்கு வலியை ஏற்படுத்தலாம், ஆனால் அது கணிசமான தீங்கு விளைவிக்காது என்பதால் அதற்காக கவலைப்படத் தேவையில்லை எனவும், வலியின் தீவிரம் நபருக்கு நபர் அவர்களின் வலி சகிப்புத்தன்மை மற்றும் தோலில் ஊடுருவிய கொடுக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும் என்று RNLI தெரிவித்துள்ளது.

ஈரான்

# 40 வருடங்களுக்குப் பின்னர் அனுமதிக்கப்படும் பெண்கள்



ஈரானில் 40 வருடங்களுக்குப் பின் உள்ளூர் காற்பந்து போட்டிகளை மைதானத்தில் பார்வையிட பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் 1979 ஆம்ஆண்டு இடம்பெற்ற இஸ்லாமிய புரட்சிக்கு பின்னர் பெண்கள் விளையாட்டு மைதானத்திற்குச் சென்று போட்டிகளைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை முதன் முறையாக, பெண்களுக்கு மைதானத்தில் உள்ளூர் காற்பந்து போட்டிகளைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 500 காற்பந்து ரசிகைகள் தனியான நுழைவு வாயில் வழியாக போட்டிகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

சமீபத்தில் டெஹ்ரானில் ஒரு பெண் ரசிகை காற்பந்து போட்டியைப் பார்க்க அனுமதி கேட்டு தன்னைத்தானே தீயிட்டுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நோர்வே

# 77 பேரைக் கொன்ற கொடூரன்; அரசுக்கு எதிராக வழக்கு

நோர்வேயில் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அண்டர்ஸ் பெஹ்ரிங் ப்ரீவிக் என்பவரால் கடந்த 2011-ஆம் ஆண்டு வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல்களினால் சுமார் 77 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த 2012-ம் ஆண்டு பீரிவிக்கை ஆபத்தான



குற்றவாளி என அறிவித்து 23 வருடங்கள் சிறை தண்டனை விதித்து தனிமை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டார்.

இவர் தற்போது தன்னை விடுவிக்குமாறு கூறி நீதித்துறை

பிரான்ஸ்

# இனி 90 நாட்கள் மாத்திரமே ; பிரான்ஸ் அரசின் புதிய அறிவிப்பு



பிரித்தானியாவைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாமல் பிரான்சில் 90 நாட்கள் மாத்திரமே தங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவிப்பானது பிரித்தானிய மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக பிரித்தானியர்கள் ஐரோப்பிய மற்றும் வெளியுறவு விவகார அமைச்சகத்துக்கு ஒரு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அதில் ”90 நாட்கள் மட்டுமே விசா இல்லாமல் தங்க முடியும் என்ற அறிவிப்பு பிரித்தானிய மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே முன்பு இருந்தது போல 180 நாட்களுக்கு விசா இல்லாமல் தங்கு முடியும் என்று நடைமுறையை மீண்டும் அமுலுக்கு கொண்டுவர வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 29 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.